# பெருநகர
# சென்னை மாநகராட்சி

EDP CELL
CORPORATION OF CHENNAI
12 JUN 2017

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்

ஆண்டு சந்தா ரூ. 2,000/-

மலர் : 23 இதழ் : 1162 நாள் : 08 – 06 – 2017

## 1. மண்டலம் –8

ம.அ.8.ந.க.எண்.எச்1/985/2017

## மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி மண்டல அலுவலர்–8 அவர்களால் கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், கீழ்காணும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (e-tender) அதிகாரம் பெற்ற அலுவலரால் **20.06.2017 தேதி பிற்பகல் 3.00 மணிவரை** தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும். பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் வருகை தரும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் **20.06.2017 அன்று பிற்பகல் 3.30 மணியளவில்** கணினி மூலம் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ அல்லது ரத்து செய்யவோ ஒப்பம் கோரும் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. வேலைப்பற்றிய இதர விவரங்களை அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். வேலைக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளி படிவத்தை **20.06.2017 அன்று பிற்பகல் மாலை 3.00 மணிக்குள்** https://tntenders.gov.in என்ற வலை தளத்திலிருந்து இலவசமாக Digital Signature Card/e.token பயன்படுத்தி ஒப்பம் சமர்ப்பிக்கவேண்டும். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி மின்னணு முறையில் கணினி மூலமாக மட்டுமே (e.submission) பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிக்கான முன்வைப்புத் தொகைக்கான வரைவோலை ஸ்கேன் செய்து ஒப்பந்தப்புள்ளியுடன் கணிணி மூலம் ஏற்றப்படல் வேண்டும். வேலைக்கான முன்வைப்புத் தொகைக்கான அசல் வரைவோலை இதர ஆவணங்கள் **20.06.2017 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள்** மண்டல அலுவலகம்–8, எண்.36B, புல்லா அவின்யு செனாய் நகர் சென்னை–30 அலுவலகத்தில் அதற்கான ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

| வ. எண் | கோப்பு எண் பணியின் விவரம் | பணியின் தோராய மதிப்பு (ரூ.இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை (ரூ.) | ஒப்பந்ததாரர் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| 1. | எச்1/985/2017<br>பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–8, பகுதி–23, வார்டு–104ல் உள்ள ஒட்டேரி மயான பூமியில் 1 மயான பொறுப்பாளர், உடல் எரிப்பதற்கு 3 மயான உதவியாளர்கள் மற்றும் 3 காவலாளிகள் வைத்து ஒரு வருடத்திற்கு பராமரிக்கும் பணி. | 21.85 | 22,000 | இத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் |

ஒப்பந்ததாரர்கள் தங்கள் DSC டோக்கனை பயன்படுத்தி https://tntenders.gov.in என்ற வலை தளத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**மண்டல அலுவலர்/ம–8**

## 2. இயந்திர பொறியியல் துறை

இ.பொ.து.அ.ந.க.எண்.பி1/227/2017

## (e-Tender) மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது.

| வ. எண் | கோப்பு எண். பணியின் விவரம் | பணியின் மதிப்பு(ரூ.) | முன்வைப்பு தொகை (ரூ.) | ஒப்பப்படிவ விலை | ஒப்பந்ததாரர் விவரம் | ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பி1/227/2017 பெநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு 95,000 எண்ணிக்கையில் கையேடு (Student Dairy) கொள்முதல் செய்து வழங்குதல் | 16,50,000 | ரூ.1% | – | அச்சகத் தொழிலில் சொந்த இயந்திரங்களுடன் கூடிய அச்சக உரிமையாளர்கள் | 23.06.2017 அன்று பிற்பகல் 3.00 மணி வரை |

1. ஒப்பப்படிவங்கள் http://tntenders.gov.in மற்றும் www.chennaicorporation.gov.in ஆகிய இணையதளம் மூலம் **23.06.2017 அன்று பிற்பகல் 2.00 மணிவரை** இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம். ஒப்பந்ததாரர் Digital Signature Certificate பெற்றிருக்க வேண்டும். மேலும் ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் தான் சமர்ப்பிக்க வேண்டும்.

2. ஒப்பந்தங்கள் **23.06.2017 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு** முன்னதாக இணையதளம் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். இணையதளம் மூலம் பெறப்படும் ஒப்பங்கள் **23.06.2017 அன்று பிற்பகல் 3.15 மணிக்கு** ரிப்பன் மாளிகை மேற்பார்வை பொறியாளர், இயந்திர பொறியியல் துறை அலுவலகத்தில் ஒப்பந்ததாரர் முன்னிலையில் இணையதளம் மூலம் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக இருப்பின் அடுத்த வேலை நாட்களில் அதே நேரத்தில் திறக்கப்படும். இதர அசல் / நகல் ஆவணங்கள் 23.06.2017 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் மேற்பார்வை பொறியாளர். இயந்திரம் பெறியியல் துறை (தலைமையிடம்) அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

3. ஒப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கும்பொழுது முன் வைப்புத் தொகைக்கான காசோலையினை நகலினை (Scanned Copy) இணைத்து அனுப்ப வேண்டும். முன்வைப்புத் தொகையினை தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் இருந்து வரைவு காசோலை, ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் பெயரில் எடுக்கப்பட வேண்டும். காசோலையினை காலம் 90 நாட்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் இணையதளம் மூலம் தெரிவிக்கப்படும். நிர்வாக காரணங்கள் ஏதேனும் இருப்பின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யும் உரிமை ஒப்பந்தப்புள்ளி வரவேற்கும் அலுவலருக்கு உள்ளது

**மேற்பார்வை பொறியாளர் (இ,தி.க.மே./பொ.சு)**



குப்பையை மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று தரம் பிரித்து
வீடு தேடி வரும் துப்புரவுப் பணியாளர்களிடம் வழங்குங்கள்